1. நிதிக்கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுத்த பயோ மெட் கைட்றோபவர் (தனியார்) கம்பனியின் ("கம்பனி") 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக்கூற்று, ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பெருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கம்பனி 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது

அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	LKAS 16 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் 37 ஆம் பந்திக்கமைய ஆதனம் மற்றும் பொறியின் வகுப்பு சொத்துக்களின் அதே தன்மை மற்றும் நிறுவன செயற்பாடுகளில் பயன்பாடு என்பவற்றின் வகைப்படுத்தலாக உள்ளது. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 259 மில்லியன் தொகையான மின்பொறியின் பெறுமதி பொறின்	ஏற்றுக்கொள்கின்றோம், மதிப்பாய்வு திணைக்களம் மொத்த பெறுமதியாக ரூபா 259 மில்லியன் வழங்கியிருந்ததுடன் மின்பொறி கொள்வனவை கருத்திற் கொள்வதற்காக அதனை பயன்படுத்தப்பட்டது. இந்த மதிப்பாய்வின் விபரங்களை வழங்குவதற்கு பல காலம் வேண்டப்பட்ட போதிலும் மதிப்பாய்வு திணைக்களத்திடம்	கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்

பெறுமதியுடன் சேர்த்து காணி மற்றும் கட்டிடங்களையும் கொண்டிருந்தது. எவ்வாறாயினும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் பொறியிற்கான பெறுமதி புறம்பாக பெறுவதற்கு கணக்கீடு செய்யப்பட வேண்டும். ஆகவே, மதிப்பீட்டு அறிக்கை இன்மையால் ஒவ்வொரு கூறியதும் சரியான பெறுமதி மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. மேலும், நியமத்தின் 58 ஆம் பந்தியின் ஏற்பாடுகளிற்கு முரணாக கம்பனியால் காணியின் மீது பெறுமானததேய்வு செய்யப்பட்டிருந்தது.	இருந்து எவ்வித பதிலும் பெறப்பட்டிருக்காததுடன் வருடாந்த கணக்கினை இறுதியாக்கலுடன் செயற்படுத்தப்பட்ட மொத்த மதிப்பாய்வு தொகையை பயன்படுத்த வேண்டியிருந்தது.	
(ஆ) LKAS 16 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் 73(இ) ஆம் பந்திக்கமைய பயன்பாட்டு காலம் மற்றும் பயன்படுத்தப்பட்ட பெறுமானதேய்வு வீதம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், கட்டிடங்களிற்கான பயன்பாட்டு காலம் அல்லது பயன்படுத்தப்பட்ட பெறுமானதேய்வு வீதம் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 3.2 இல் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை	ஏற்றுக்கொள்கின்றோம். பிரயோகிக்கப்படப்ட வீதம் வருடாந்தம் 6 சதவீதமாகவும் பயன்பாட்டு காலம் 15 ஆண்டுகளாகவும் இருந்ததுடன் இதன்படி வெளிப்படுத்தப்படும்.	கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணய்கியொழுக வேண்டும்
(இ) ரூபா 321,267 தொகையான மின்சார மற்றும் தங்குமிட கட்டணங்களின் அட்டுறு செலவினம் என்பன 4 LKAS - 8 இன் (கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டில் மாற்றங்கள் மற்றும் தவறுகள்). 42 ஆம் பந்திக்கமைய நிதிக் கூற்றுக்களில் முன்னைய ஆண்டு சீராக்கல்கள் செய்யப்படாமல் மீளாய்வாண்டில் பதியப்பட்டது.. இதன்விளைவால், ஆண்டிற்கான இலாபம் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம், இந்த விடுபாடுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணய்கியொழுக வேண்டும்.

1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்பு	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரைகள்**
ஐந்து செலவின வகுதிகளில் ரூபா 764,389 ஆன தொகை கணக்கீடு	ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன்படி திருத்தம் செய்யப்படும்.	அட்டுறு செலவினங்களை

செய்யப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் 2024 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு கட்ணங்களிற்காக ஏற்பாடுகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.				கணக்கீடு செய்வதற்கும் கணக்காய்வு கட்டணங்களிற்காக ஏற்பாடுகள் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.6. கணக்காய்விற்கு கிடைக்கப்பெறாத ஆவணச் சான்றுகள்

விடயங்கள்	தொகை ரூபா	கிடைக்கப்பெறாத சான்றுகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
பங்கு விண்ணப்ப பணம்	ரூபா 169 மில்லியன்	பணிப்பாளர் சபை மற்றும் உரிய அதிகாரிகள் என்போரிடமிருந்து அனுமதிகள்	முழுமையாக மறுக்கப்பட்டது. இந்த குறித்த கொள்வனவு பணிப்பாளர் சபையின் அனுமதியில் பூர்த்தியாக்கப்பட்டது ரூபா 259 மில்லியன் பெறுமதி கொள்வனவை கருததிற் கொண்டதாக அனுமதிக்கப் பட்டதுடன் ரூபா 259 மில்லியன் செலுத்துவதால் கொள்வனவு செய்யப்பட்டது. மொத்த கொள்வனவை கருத்திற் கொள்கையில் ரூபா 90 மில்லியன் வரையறுத்த இலங்கை எனர்ஜீ (தனியார்) கம்பனி பெயரிற்கு பங்கினை மாற்றுவதாக பதியப்பட்டதுடன் மிகுதி வழங்கப்பட்ட பங்குகள் இன்னமும் பங்கு விண்ணப்ப பணமாக பதியப்பட்டுள்ளது.	பேரிய மற்றும் முறையான ஆவணச் சான்றுகள் உதாரணமாக சபை விஞ்ஞாபனம் மற்றும் தீர்மானம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ) 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவு	வரி மதிப்பீட்டு ஆண்டு முடிவடைந்த பின்னர் நவம்பர் 30 அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு பட்டியலுடன் சேர்த்து முறையாக பூர்த்தி செய்யப்பட்ட அறிக்கை மற்றும் வேறு ஏதாவது	ஏற்றுக்கொள்ளப்பட்டது IRD கோவையிடலுடன் செயற்படும் நோக்கில் நிலையான சொத்து விடயங்களை தனித்தனியாக பெறுமதியிடல் மூலதன படி கணிப்பிடுவதற்கு மதிப்பாய்வு திணைக்கத்திடமிருந்து	உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தீன் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும்.

		வேண்டப்பட்ட ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கம்பனி சொல்லப்பட்ட அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கி 2023/2024 வரி மதிப்பீட்டு ஆண்டிற்கான அறிக்கை தயாரித்திருக்கவில்லை.	பெறப்பட வேண்டியிருந்தது. இந்த பூர்த்தியை பெறுவதற்கு ஏற்கனவே திருத்தப்பட்டிருந்தது.	
(ஆ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய கூட்டு ஆளுகை மீதான வழிகாட்டல் மீதான 2.3 ஆம் பிரிவு மற்றும் 2023 செப்தெம்பர் 27 ஆந் திகதிய 01/2021(ii) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	தாய் கம்பனிக்கான இறுதியாக்கப்பட்ட உபாய திட்டங்கள், செயல் நடவடிக்கை திட்டங்கள் மற்றும் வருடாந்த பாதீடு என்பவற்றை சமர்ப்பிப்பதற்கு துணைநிலை கம்பனிகள் வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், தாய் கம்பனிக்கான செயல் நடவடிக்கை திட்டங்கள் மற்றும் வருடாந்த பாதீடு தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் கணக்காய்விற்கு போதிய ஆவணச் சான்றுகள் கிடைப்பதற்கு செய்யப்பட்டிருக்கவில்லை.	பாதீடுகள் தனிப்பட்ட ரீதியில் துணைநிலை கம்பனிகளிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. தாய் நிறுவனம் (SLE) மொத்த பாதீடாக அந்த பிரிவு தயாரிக்கின்றதுடன் 2024 ஆம் ஆண்டிற்கான அனுமதிக்கப்பட்ட பாதீடு ஏற்கனவே கண்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது.	அரசுடமையாக்கப்பட்ட முயற்சிகளின் கூட்டு ஆளுகை மீதான வழிகாட்டலுடன் இணங்கியொழுக வேண்டும்.
(இ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய கூட்டு ஆளுகை மீதான வழிகாட்டலின் 2.4 ஆம் பிரிவு	பணிப்பாளர் சபை (BOD) அவர்களுடைய உறவினை தனிப்பட் ரீதியில் தனிப்பட்ட ரீதியில் கூட்டு ஆளுகை மீதான வழிகாட்டலின் இணைப்பு II இல் வழங்கப்பட்ட படிவத்தை பயன்படுத்தி சபை செயலாளருக்கு வருடாந்தம் வெளிப்படுத்தப்பட வேணடியதுடன் SOE இன் ஆண்டறிக்கை (AR) ஒவ்வொரு பணிப்பாளர் தொடர்பிலும் வெளிப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், கம்பனியானது 2024 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் சபையில் பணிப்பாளரின் வெளிப்படுத்தலை பெற்றிருக்காததுடன் ஒவ்வொரு பணிப்பாளர்	ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன்படி திருத்தம் செய்யப்படும்.	அரசுடமையாக்கப்பட்ட முயற்சிகளின் கூட்டு ஆளுகை மீதான வழிகாட்டலுடன் இணங்கியொழுக வேண்டும்.

		தொடர்பான தகவல்கள் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.		
(ஈ)	2012 ஏப்ரல் 17 ஆந் திகதிய இலங்கை மின்சார சபையுடனான நிலைபெறான மின்சார கொள்வனவு உடன்படிக்கையின் 2 ஆம் உறுப்புரையின் (2.2) (ஆ) ஆம் பிரிவு	வர்த்தக செயற்பாட்டு திகதிக்கு முன்னர் மற்றும் ஒவ்வொரு அடுத்துவரும் ஆண்டின் திசெம்பர் 01 அல்லது அதற்கு முன்னர் வருடாந்த எதிர்வு கூறல்களை CEB இற்கு சமர்ப்பிக்க வெண்டும் அது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது. (i) எதிர்பார்க்கப்பட் மாதாந்த மின்னுருவாக்க கிடைப்பனவு மற்றும் (ii) ஒவ்வொரு ஆண்டிற்குமான வெளியேற்ற பட்டியல், வழங்கப்பட்டது எவ்வாறாயினும் விற்பனையாளர் CEB இற்கு பொறுப்பற்கு இருந்தவை மற்றும் CEB இற்கு வழங்கப்பட்ட மின்வலுவின் உள்ளபடியான தொகை மீது தண்டப்பணமல்லாது உட்படுத்த வேண்டும் அல்லது சொல்லப்பட்ட எதிர்வு கூறலிலல் காட்டப்பட்ட தொகை அலலது விடயங்களிலுள்ள வித்தியாசம், எவ்வாறாயினும், கம்பனியானது 2024 ஆம் அண்டிற்காக வருடாந்த மின்வலு எதிர்வுகூறலை CEB இற்கு தயாரித்து சமர்ப்பித்திருக்கவில்லை.	கவனத்திற்கு எடுக்கப்பட்டது இதன்படி செயற்படுத்தப்படும்.'	இலங்கை மின்சார சபையுடனான நிலையான மின்சார கொள்வனவு உடன்படிக்கையுடன் இணங்கியொழுக வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1. நிதிசார் விளைவுகள்

கம்பனியானது 2023 திசெம்பரி 01 இல் வரையறுத்த சிறீலங்கா எனேர்ஜீஸ் (தனியார்) கம்பனியால் சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் 2023 இல் முடிவடைந்த ஆண்டில் ஒரு மாத காலப்பகுதிக்காக செயற்பட்டது. 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 16,752,033 ஆன நட்டமாக உள்ளதுடன் அதற்கு நேரொத்த 2023 இல் முடிவடைந்த ஆண்டில் ஒரு மாத காலப்பகுதிக்காக நட்டம் ரூபா 1,019,791 தொகையாகும்..

மீளாய்வாண்டில் வருமானத்தில் வீழ்ச்சி மற்றும் விற்பனை கிரயத்தில் அதிகரிப்பு வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக இருந்தன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1. முகாமைத்துவ திறமையீனங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
வரையறுத்த சிறீலங்கா எனேர்ஜீஸ் (தனியார்) கம்பனியால் 2023 ஒக்தோபர் 25 இல் வரையறுத்த பயோ மெட் கைட்றோபவர் (தனியார்) கம்பனியை சுவீகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கம்பனியானது 2025 மே 08 வரையும் தாய்க் கம்பனியால் வழங்கப்பட்ட ரூபா 90 மில்லியன் பங்கு மூலதனமாக பங்குச் சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், முன்னைய பங்குரிமையாளரின் பங்குச் சான்றிதழ் னம்பனியால் இரத்து செய்யப்பட்டிருக்கவில்லை.	பங்கு மாற்றம் சுழுஊ இன் கீழ் 15 இலிருந்து மற்றும் வரையறுத்த சிறீலங்கா எனேர்ஜீஸ் (தனியார்) கம்பனியாக தனியுரிமையில் 15 சான்றிதழ்களில் கோவையிடல் ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்டது. இதன்படி முன்னைய வழங்கப்பட்ட பங்குச் சான்றிதழ் இரத்து செய்வதற்கு கவனம் செலுத்தப்படும். .	முறையான தீர்மானம் பெறுவதற்கு பணிப்பாளர் சபைக்கு பங்கு மூலதனம் பற்றிய தகவல்களை முன்வைக்கப்பட வேண்டும்.

3.2 செயற்பாட்டு திறமையீனங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
வரையறுத்த சிறீலங்கா எனர்ஜீ (தனியார்) கம்பனியானது தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை கருத்திற்கொண்டு 2023 மே 16 இல் பணிப்பாளர் சபையால் வழங்கப்பட்ட அனுமதி பிரகாரம் 2023 ஒக்தோபர் 25 இல் ரூபா 259 மில்லயன் கிரயத்தில் மின்பொறியொன்றை கொள்வனவு செய்திரந்தது. இதன்படி, கம்பனியின் உள்ளபடியான செயலாற்றலுடன் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் பரிந்துரைகளை ஒப்பீடு செய்வதன் மூலம் பின்வரும் அவதானிப்பகள் செய்யப்பட்டன.	2024 ஆம் அண்டின் பொது எதிர்பார்த்த மட்டத்தில் இல்லாத எதிர்பார்க்கப்பட்ட வட கிழக்கு மழைக் காலத்தை கருத்திற் கொண்டுள்ளது.டன் இரண்டு ரேபைனகள் மின்னுருவாக்க இயலளவு குறைவாக இருந்ததுடன் அதிகமான நேரங்களில் இரண்டு ரேபைன்களில் ஒன்று மாத்திரமே நீர்ப்பாய்ச்சல் இன்மையால் செயறப்பட்டிருந்தது.	
(i) 2024 ஆம் ஆண்டிற்கான எதிர்பார்க்கப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானம் முறையே ரூபா 67.3 மில்லியன் மற்றும் ரூபா 12.78 மில்லியனாக இருந்தது.	நிலவிய பருவகால வரட்சியை கருத்திற்கொண்டு எந்தவொரு இடையூறும் இல்லாமல் 2025 ஆம் அண்டில் சிறந்த மட்ட செயலாற்றல் எதிர்பார்க்கின்ற	விலகல்களிற்கான காரணம் புலனாய்வு செய்யப்பட வேண்டும். இதன்படி முறையான தீர்மான

	எவ்வாறாயினும், கம்பனியானது எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தில் 18.9 சதவீதம் மாத்திரம் அடையப்பட்டிருந்தது.	காலப்பகுதியாக இருப்பினும் ரேபைன்களின வெளியேற்றுகை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.	பெறுவதற்கு தகவல்கள் முன்வைக்கப்பட வெண்டும்.
(ii)	2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளிற்காக முறையே ரூபா 43.9 மில்லியன் மற்றும் 44.7 மில்லியன் மொத்தமான இலாபம் உழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளிற்கான உள்ளபடியான தொகைகள் முறையே ரூபா 0.90 மில்லியன் மற்றும் 22.99 மில்லியன் மொத்தமான நட்டம் ஏற்பட்டது.	இது 2025 ஆம் ஆண்டின் முதலாவது ஐந்து மாதத்தில் வருமான உருவாக்கம் இலாபம் உழைத்திருந்ததென உறுதிப்படுத்த முடிந்ததுடன் இரண்டு ரேபைன்களும் எதிர்பார்க்கபபட்ட செயலாற்றலைவிட குறைவாக இருந்ததுடன் ரூபா 30.2 மில்லியன் உருவாக்கப்பட்டது.	விலகல்களிற்கான காரணம் புலனாய்வு செய்யப்பட வேண்டும். இதன்படி முறையான தீர்மான பெறுவதற்கு தகவல்கள் முன்வைக்கப்பட வேண்டும்.
(iii)	2023 மற்றும் 2024 ஆம் ஆண்டிற்காக முறையே ரூபா 31.6 மில்லியன் மற்றும் ரூபா 32.2 மில்லியன் இலாபம் உழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளிற்கான உள்ளபடியான தொகைகள் முறையே ரூபா 1.01 மில்லியன் மற்றும் 16.75 மில்லியன் மொத்த நட்டமாக இருந்தது.	மேலும் 2024 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த நட்டத்தில் 60 சதவீதம் (ரூபா 15.8 மில்லியன்) சாதாரண செலவினமாக இருந்த வருடாந்த பெறுமானத் தேய்விற்காக இருந்தது.	விலகல்களிற்கான காரணம் புலனாய்வு செய்யப்பட வேண்டும். இதன்படி முறையான தீர்மான பெறுவதற்கு தகவல்கள் முன்வைக்கப்பட வேண்டும்.
(iv)	2023 மற்றும் 2024 ஆம் ஆண்டிற்காக முறையே ரூபா 48.9 மில்லியன் மற்றும் ரூபா 49.4 மில்லியன் வருடாந்த காசுப்பாய்ச்சல் எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயீனும், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளிற்கான உள்ளபடியான காசுப்பாய்ச்சல் ˙ முறையே ரூபா 0.6 மில்லியன் மற்றும் 1.14 மில்லியனாக இருந்தது.		விலகல்களிற்கான காரணம் புலனாய்வு செய்யப்பட வேண்டும். இதன்படி முறையான தீர்மான பெறுவதற்கு தகவல்கள் முன்வைக்கப்பட வேண்டும்.
(v)	2024 ஆம் ஆண்டிற்காக எதிர்பார்க்கபடப்ட வருடாந்த மின்னுருவாக்கம் 3.6 GWs ஆக அருந்தது. எவ்வாறாயினும் உள்ளபடியான மின்னுருவாக்கம் 0.72 GWs ஆக இருந்ததுடன் கம்பனியானது எதிர்பார்க்கப்பட்ட வருமாந்த மின்னுருவாக்கலில் 20 சதவீதத்தை மாத்திரம் அடைந்திருந்தது. எதிர்பாராதவிதமாக மேற்குறித்த (ii), (iii) (iv) மற்றும் v) இன் பிரகாரம் கம்பனியானது 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளிற்காக எதிர்பார்த்த மற்றும் செயற்பாட்டு செயலாற்றலை அடைவதற்கு இயலாதிருந்தது என அவதானிக்கப்பட்டது.		விலகல்களிற்கான காரணம் புலனாய்வு செய்யப்பட வேண்டும். இதன்படி முறையான தீர்மான பெறுவதற்கு தகவல்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

3.3 கொள்வனவு முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2006 சனவரி 25 ஆந் திகதிய கொள்வனவு வழியாட்டலின் பந்தி 3.7.2 இன் பிரகாரம் - தனிப்பட்ட PEs மற்றும் உபகரணங்களை (நிறுத்தல்கணக்கு) பயன்படுத்தி வேலைகளை நிறைவேற்றல். அத்தகைய வேலைகளின் நிறைவெற்றலை பெறுப்பேற்பதற்கு தொழிலாளர் படையணி தேவப்பட்டது என PE நிர்ணயிக்கப்படுமாயின் இந்த முறை சில சந்தர்ப்பங்ளில் முறையாக உள்ளது. (அ) முற்பணங்களில் அளவுகள் கடினமாக இருக்கின்ற போது (ஆ) நியாயமான விலையில் கோள்வி கோருவதறகு ஒப்பந்தகாரர் விரும்பும் போது (ஈ) வேலைகள் நடைபெறும் போது இடையூறு இல்லாமலட மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் (ஈ) அவசர கவனம் தேவைப்பட்ட அத்தியாவசிய நிலைமைகள். எவ்வாறாயீனும் கம்பனியானது கொள்வனவு வழிகாட்டலில் உள்ளடக்கப்பட்ட நியமத்தை கருத்திற்கொள்ளாமல் படையணிக் கணக்கிற்கு அதே முறையை தெரிவுசெய்திருந்தது. மேலும், கம்பனியானது கட்டிட நிர்மாண வேலைகளை நிறைவேற்றுவதற்கு தேவைப்பட்ட தொழிலாளர் படையணியை நிர்ணயித்திருக்காததுடன் நிர்மாண வேலைகளிற்காக நாட்கூலி அடிப்படையில் சேர்க்கப்பட்ட 12 ஊழியர்களிற்காக ரூபா 5,163,151 தொகையான சம்பள செலவினம் ஏற்பட்டது. மேலும் ஆண்டின் போது மேற்கொள்பட்ட மேற்குறிப்பிட்ட வேலைகளிற்காக சபை அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.	BOQ'S மற்றும் மதிப்பீடுகள் அடிப்படையில நிர்மாண தொழிலாளிகள் வேலைகள் இடையூறு இல்லாமல் மேற்கொள்ள மற்றும் அவசர நிலையயில் வேலையின் அடிப்படையில் வாடகைக்கமர்த்தப்பட்டனர். எவ்வாறாயினும் நிர்மாண தொழிலாளருக்கு செய்யப்பட்ட நாளாந்த கொடுப்பனவுகள் நாள் ஒன்றிற்கு மாகாண அரசாங்கம் அனுமதித்த வீதங்களின் அடிப்படையில் முழுமையாக இருந்தது. மற்றுமும் பன்னிரண்டு ஊழியர்களிற்கான ரூபா 5,163,151.00 அறிக்கையிடல் காலத்தின் இறுதியில் பெறப்பட்ட திகதியிலிருந்து 13 மாதகால பகுதிக்கானதாக இருந்தது.	கொள்வனவு வழிகாட்டல், கொள்வனவு கைநூல் மற்றும் அதன் குறைநிரப்புகள் என்பவற்றுடன் இணங்கியொழுக வேண்டும
(ஆ)	2006 சனவரி 25 ஆந் திகதிய கொள்வனவு வழியாட்டலின் பந்தி 4.3.1 (அ) இன் பிரகாரம் சகல இணைந்த கிரயங்களும் உள்ளடங்கிய மொத்த கிரய மதிப்பீடு கொள்வனவுநிறுவனத்தால் (PE) தயாரிக்கப்பட வேண்டும்.	ஏற்றுக்கொள்ளப்படவில்லை. தனியான BOQ's மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப் பட்டிருந்ததுடன் ஒவ்வொன்றினது ஒவ்வொரு நிர்மாணம் / காலம் முழுவதும் நடாத்தப்பட்ட பராமரிப்புகளிற்காக உவ்வொன்றும்	கொள்வனவு வழிகாட்டல், கொள்வனவு கைநூல் மற்றும் அதன் குறைநிரப்புகள் என்பவற்றுடன் இணங்கியொழுக

	எவ்வாறாயினும் கம்பனியானது கட்டிட நிர்மாணங்கள் மற்றும் உபகரண அபிவிருத்திகளிற்காக மேற்குறிப்பிட்ட மதிப்பீடுகளை தயாரித்திருக்கவில்லை. மேலும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்குறிப்பிட்ட வேலைகளிற்காக ஏற்பட்ட கிரயங்கள் ரூபா 17,786,845 ஆக இருந்தது	கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது..	வேண்டும
(இ)	2006 சனவரி 25 ஆந் திகதிய கொள்வனவு வழிகாட்டலின் பந்தி 4.2.1 (இ), (ஆ), (இ) இன் பிரகாரம் PE ஆனது பிரதான கொள்வனவு திட்டம் (MPP) தயாரிக்கப்பட வேண்டும். குறைந்தது மூன்று ஆண்டு காலப்பகுதிக்கான கொள்வனவு நடவடிக்கைகள் MPP இல் பட்டியலிடப்பட வேண்டியதுடன் உடனடிய அடுத்துவரும் ஆண்டுகளிற்கான கொள்வனவு நடவடிக்கைகள் விரிவாக தயாரிக்க்பட வேண்டும். எவ்வாறாயினும், கம்பனியானது மேற்குறிப்பிட்ட வேண்டுகையை நிறைவேற்றியிருக்கவில்லை.	தற்போது கம்பனி 2025 அன் தயாரிப்பில் உள்ளது.	கொள்வனவு வழிகாட்டல், கொள்வனவு கைநூல் மற்றும் அதன் குறைநிரப்புகள் என்பவற்றுடன் இணங்கியொழுக வேண்டும
(ஈ)	கொள்வனவு கைநூலின் குறைநிரப்பு 38 இன் மோட்டார் வாகன திருத்தங்கள் மற்றும் உபகரணங்கள் - 9.3.1 (அ) ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 500,000 இற்கு விஞ்சிய திருத்தங்கிற்காக அமைச்சு செயலாளரின் அனுமதி பெறப்பட வெண்டும். எவ்வாறாயினும் கம்பனியானது ரூபா 741,934 தொகையான வாகன திருத்தங்களிற்காக அமைச்சு செயலாளரின் அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	திருத்த வேலைகள் கொன்வனவு திகாரகளின் கையளபபுகளின் பிரகாரம் கேள்வி கோரல் மற்றும் அனுமதி நடைமுறைகள் மூலம் கொள்வனவு பிரமாணங்களின் வேண்டுகையை திருப்திசெய்து பூர்த்தியாக்கப்பட்டது. இது ஆன்னைய ஆண்டினை போல ஒரே முறையை பின்பற்றியிருந்தது.	கொள்வனவு வழிகாட்டல், கொள்வனவு கைநூல் மற்றும் அதன் குறைநிரப்புகள் என்பவற்றுடன் இணங்கியொழுக வேண்டும